3 மார்ச் 2024
தவக்காலம் 3 ஆம் ஞாயிறு

NEW WAY OF BEING CHURCH

# newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)




# இரக்கம் என்னும் கயிற்றால் ஆண்டவர் நம்மை இணைத்துள்ளார்

எருசலேம் ஆலயத்தில் வியாபாரிகள் மற்றும் நாணயங்கள் மாற்றுபவர்களின் மேசைகளை கவிழ்ப்பதன்மூலம் இயேசு ஒரு துணிச்சலான செயலைச் செய்கிறார். தன் தந்தையில் இல்லம் ஒரு சந்தையாக மாறிவிட்டது என்று குற்றம் சாட்டுகிறார். ஆலயத்தை தூய்மைப்படுத்துவதைப் பற்றி யோவான் தனது நற்செய்தியில் விவரிக்கும்போது, இதனால் இயேசுவுக்கும் யூதத் தலைவர்களுக்கும் இடையிலான பிளவைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

இந்த நிகழ்வு யூதத்தலைவர்கள் இயேசுவுக்கு எதிராக மாறுவதற்கு வழிவகுக்கிறது. அவர்கள் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார்கள். இயேசுவும் அவருடைய உடலாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசுகிறார். இந்த ஆலயத்தை இடித்துவிடுங்கள். மூன்று நாளில் இதை நான் மீண்டும் கட்டுவேன். இயேசுவின் இந்த வார்த்தைகள் அவரின் உயிர்த்தெழுதலின் மூலம் நிறைவேறுகிறது.

தவக்காலம் இயேசுவை சந்திப்பதற்கும் குறிப்பாக திருவழிபாட்டில் பாஸ்கா மறைபொருளை மீண்டும் வாழ்வதற்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. இன்று தவக்காலம் மூன்றாம் ஞாயிறின் முதல் வாசகத்தில் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய பத்துக் கட்டளைகளைப் பற்றி நாம் வாசிக்கின்றோம். கடவுள் தம் மக்களுக்குக் கொடுத்த சட்டங்களின் தொகுப்பு இவை. காலப்போக்கில் இந்தச் சட்டங்களை மக்கள் பின்பற்றுவதற்கும், கீழ்ப்படிவதற்கும் சாத்தியமில்லை என்று பலர் நினைக்கலாம். ஒன்றைக் கடைப்பிடிக்கத் தவறினால், மற்ற அனைத்தையும் மீறுவதற்கு சமம். நன்னெறிகளை கடைப்பிடிக்கத் தவறினால், கடவுளின் மக்கள் அழுக்கடைகின்றனர். இயேசு ஆலயத்தைச் சுத்தப்படுத்துவதும் இதுபோலத்தான்.

இன்று ஆண்டவராகிய இயேசு நம்மையும் தூய்மைப்படுத்த விரும்புகிறார். பத்துக் கட்டளைகள் நமக்கு ஒரு திசைகாட்டும் கருவியைப்போல் செயல்படும் வேளையில் அதை மீண்டும் வரையறை செய்து தருகிறார் “உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும், முழு மனத்தோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு செலுத்து” இதுவே தலை சிறந்த முதன்மையான கட்டளை. உன் மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக” என்பது இதற்கு இணையான இரண்டாவது கட்டளை. திருச்சட்ட நூல் முழுமைக்கும் இறைவாக்கு நூல்களுக்கும் இவ்விரு கட்டளைகளே அடிப்படையாக அமைகின்றன” (மத்தேயு 22:37-40)

அன்பு என்னும் சூழலில் இறைவனின் கருணையே நம்மை இனைக்கும் கயிறாக இருக்கிறது. ஆண்டவர் அவரின் அன்பு என்னும் கயிற்றால் நம்மைத் தூய்மைப்படுத்தி, புனிதப்படுத்த அவரை அனுமதிப்போம். குறைவான ஒன்றை நிறைவாக்கவும், சிறிதான ஒன்றை மேலானதாக்கவும் அவருடைய இரக்கத்தை வேண்டுவோம். அருளடையாளங்களைத் கேட்காமல், சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை அறிவிப்போம். ஏனென்றால் அவரில் மட்டுமே நிலைவாழ்வு உண்டு.

### மேற்கோள்:

*சிலுவையைப் பார்க்கும்போதெல்லாம் என் முழு உள்ளத்துடன் நான் மன்னிப்பேன்*

– புனித ஃபாஸ்டினா.







### இன்றைய இறைவார்த்தை:

விடுதலைப் பயணம்: 20:1-17

திருப்பாடல்: 18: 8-11

1 கொரிந்தியர்: 1: 22-25

யோவான் 2: 13-25

INTERNAL CIRCULATION ONLY
BUL 09/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org